NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2018

# TAMIL SECOND ADDITIONAL LANGUAGE: PAPER I

Time: 2 hours | 100 marks

---

**PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY**

1. This question paper consists of 8 pages. Please check that your question paper is complete.
2. Read the instructions to each question carefully.
3. Answer all questions taking note of any choices given.
4. Number your answers exactly as the questions are numbered.
5. All answers must be in TAMIL.
6. It is in your own interest to write legibly and to present your work neatly.

---

IEB Copyright © 2018

## SECTION A

**QUESTION 1** பகுதி ஒன்று

கீழ்வரும் கதையை நன்றாகப் படித்துப் பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக.

### இறைவனை மறந்த அறிஞர்

மடப்புறம் என்னும் ஊரிலே ஒரு செந்தமிழ்ப் புலவர் இருந்தார். அவர் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுத் தேர்ந்தவர் சங்கநூல்கள், புராணங்கள், அந்தாதிகள், கலம்பகங்கள், பிள்ளைத் தமிழ்நூல்கள் முதலிய பலவகை நூல்களையும் அவர் மனப்பாடஞ் செய்திருந்தார். எறக்குறைய இருபதினாயிரஞ் செய்யுள்களுக்குமேல் அவருக்கு மனப்பாடமாகியிருந்தன. அப் பாடல்களின் பொருள்களையும் அவர் பாடங்கேட்டு நன் குணர்ந்திருந்தார். அப்புலவரைப் பலரும் நன்கு மதித்துப் போற்றினர்.

அப்புலவர் நூலறிவை நன்கு பெற்றிருந்தாராயினும் கோயிலுக்குச் செல்லமாட்டார். இருக்கிற இடத்தில் இருந்துகூட இறைவனை எண்ணமாட்டார். தம்மிடம் வரும் மக்களுக்குக் கடவுளைப்பற்றி ஒன்றுங் கூறமாட்டார். பெரும் புலவராகவிருக்கும் அவர் இறைவனைச் சிறிதும் எண்ணாமலும் போற்றாமலும் இருக்கிறாரே என்று சிலர் அப்புலவர்மீது குறை கூறிக்கொண்டிருந்தனர். சிலர், அவர் 'கடவுள் ஒருவர் இல்லையென்னுங் கொள்கையுடையவரேர' என்றும் ஐயுற்றனர். ஒருசிலர், 'புலவர் எவ்வளவு பெரியவராக இருப்பினும் அவர் கடவுளைப் போற்றாத வரையில் அவருடைய அறிவு பயனற்றதாகும்' என்று வெளிப்படையாகவே கூறினர்.

நாளடைவில் அப்புலவரை யாரும் பொருட்படுத்த வில்லை. பலருந் தம்மை வெளிப்படையாகவே இகழ்தலைப் புலவர் உணர்ந்தார். தாம் கடவுளைப் போற்றாதிருப்பின் தாழ்வடைய நேருமென்பதை யுணர்ந்தார். தம்முடைய மடமையை எண்ணி வருந்தினார். "தெய்வப்புலமைத் திருவள்ளுவப் பெருந்தகையார், 'கடவுளைப் போற்றாதவர்களுடைய அறிவு எத்தகைய பயனையும் அடையமாட்டாது' என்று கூறியிருத்தலை நாம்

IEB Copyright © 2018

உணர்ந்திருந்தும், இறை வழிபாடு செய்யாது குறையை அடைந்தோமே" என்று எண்ணி ஏங்கினார். கோயிலுக்குச் சென்று கடவுளை வழிபாடு செய்யத் தொடங்கினார். தம்மிடத்திற்கு வரும் அன்பர்கட்குக் கடவுள் வழிபாடு, இறைவன்மாட்டு அன்பு முதலிய அரிய செய்திகளைப் பற்றிச் சொற்பொழி வாற்றினார்.

புலவரிடத்திலே இறைவழிபாடு முதலிய செயல்களைக் கண்ட மக்கள் அவரிடத்திலே அன்பு கொண்டனர். அப்புலவரின் மதிப்பு உயர்ந்தது புலவரை உண்மையாகவே மதித்துப் போற்றிப் புகழ்ந்தனர்.

[***அப்பர் அச்சகம், சென்னை-1***]

1.1 காலி இடங்களைச் சரியான சொற்களால் நிரப்புக

1.1.1 மடப்புறம் என்னும ____________ ஒரு செந்தமிழ்ப் புலவர் இருந்தார். (1)

1.1.2 பலவகை நூல்களையும் அவர் ____________செய்திருந்தார் (1)

1.1.3 தம்மிடம் வரும் மக்களுக்குக் கடவுளைப்பற்றி ____________ கூறமாட்டார். (1)

1.1.4 சிலர் அப்புலவர்மீது ____________ கொண்டிருந்தனர். (1)

1.1.5 கோயிலுக்குச் சென்று கடவுளை________ செய்யத் தொடங்கினார் (1)

1.2 சரியான விடை தருக

1.2.1 செந்தமிழ்ப் புலவர் எந்த ஊரில் வாழ்ந்து வந்தார்? (2)

1.2.2 அவர் எதை நன்கு கற்றுத் தேர்ந்தவர்? (2)

1.2.3 புலவர் மனப்பாடஞ் செய்திருந்த மூன்று நூல்களின் பெயர்களைக் கூறுக. (2)

1.2.4 அவரை சிலர் ஏன் ஐயுற்றனர்? (2)

1.2.5 நாளடைவில் என்ன ஆயிற்று? (2)

1.2.6 திருவள்ளுவர் கூறியதென்ன? (2)

IEB Copyright © 2018

1.3 எது ***சரி*** எது ***தவறு*** எனக் கூறுக

1.3.1 செந்தமிழ்ப் புலவர் இலக்கணம் படிக்காதவர். (1)

1.3.2 மனப்பாடஞ் செய்த பாடல்களின் பொருள்களையும் நன்கு உணர்ந்திருந்தார். (1)

1.3.3 ஆரம்பத்தில் அப்புலவரைப் பலரும் நன்கு மதித்துப் போற்றினர் (1)

1.3.4 அப்புலவர் கோயிலுக்கு அடிக்கடி செல்வார் (1)

1.3.5 அப்புலவர் இறைவனைச் சிறிதும் எண்ணாமலும் போற்றாமலும் இருந்தவர் (1)

1.3.6 செந்தமிழ்ப் புலவர் மடப்புறம் என்ற ஊரில் வாழ்ந்து வந்தார் (1)

1.4 ஒருமைக்கு பன்மை தருக. எ.கா. - நூல் - நூல்கள்

1.4.1 புலவர் (1)

1.4.2 பாடல் (1)

1.4.3 புராணம் (1)

1.4.4 தமிழ்நூல் (1)

1.5 எதிர்ச்சொல் தருக. எ.கா. - அது - இது

1.5.1 அப்பாடல் (1)

1.5.2 பல (1)

1.5.3 வெறு (1)

1.5.4 கடைசி (1)

IEB Copyright © 2018

1.6 கீழ்வரும் பகுதியைப் படித்துப் பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக:

**புதுமை மருத்துவம்**

குவவைக்குளம் என்னும் ஒரு சிற்றூரிலே நாகமணி என்னும் பெயருடையவன் ஒருவன் முற்காலத்திலே இருந்தான். அவனுடைய உடலிலே நல்ல ஆற்றல் இருந்தது. இளமையின் துடிப்பும் அவன் உள்ளத்தை அளவுகடந்து ஊக்கிற்று. எல்லோருஞ் செய்கிற காரியங்களுக்கு எதிரிடையாகவே இருக்கும் நாகமணியின் காரியங்கள். நாகமணி இயற்கையறிவோ, கல்வியறிவோ உடையவன் அல்லன். இளங்காளை பயமறியாது என்பதற்கேற்ப இளமையின் மிடுக்கால் எதற்கும் அஞ்சாது அறிவற்ற காரியங்களையே அவன் செய்து திரிந்தான். அதனால் ஏற்படுகிற தீமைகளையும் நாகமணி ஒரு பொருட்படுத்துவதில்லை.

[*அத்திசூடி விளக்கக் கதைகள்*
*ஆசிரியர்: திரு க இனியன்* ]

1.6.1 பெயர்ச்சொல் என்றால் என்ன? (1)

1.6.2 மேற்காணும் பகுதியிலிருந்து நான்கு(4) பெயர்ச்சொற்களை எழுதுக (4)

1.6.3 வினைச்சொல் என்றால் என்ன? (1)

1.6.4 மேற்காணும் பகுதியிலிருந்து மூன்று(3) வினைச்சொற்**களை** எழுதுக (3)

1.7 ஆண்பாலுக்குப் பெண்பால் எழுதுக: **(**எ.கா - சிறுவன் : சிறுமி**)**

1.7.1 அவன் (1)

1.7.2 ஒருவன் (1)

1.7.3 பணக்காரன் (1)

1.7.4 நண்பன் (1)

1.7.5 தந்தை (1)

1.8 பிரித்து எழுதுக:

1.8.1 பெயருடையவன் (1)

1.8.2 செய்திகளைப்பற்றி (1)

IEB Copyright © 2018 

1.8.3 அவனுக்குக்கொடு (1)

1.8.4 பூஞ்செடி (1)

1.9 சேர்த்து எழுதுக:

1.9.1 ஆட்டு + குட்டி (1)

1.9.2 பச்சை + கிளி (1)

1.9.3 மூன்று + ஆயிரம் (1)

1.9.4 மனம் + பாடம் (1)

1.9.5 பள்ளி + கூடம் (1)

1.10 கீழ்வரும் எழுத்துகளையும் சொற்களையும் **அகர** வரிசையில் எழுதுக:

1.10.1 ஊ ஏ ஆ ஈ ஐ ஔ ஒ (1)

1.10.2 உடல் அப்பா இவன் ஈகை ஆமை (1)

1.11 சரியாக எழதுக:

1.11.1 அவன் <u>பூனை</u> பிடித்தான் (1)

1.11.2 செல்வி <u>வீடு</u> சென்றாள். (1)

1.11.3 திருவேல் <u>நூல்</u> படித்தான் (1)

1.11.4 இவள் <u>கடை</u> வந்தாள் (1)

**60 marks**

IEB Copyright © 2018

## SECTION B

## QUESTION 2 பகுதி இரண்டு

கொன்றை வெந்தன்:

2.1 சரியான சொற்களால் முடிவு செய்க:

2.1.1 அன்னையும் பிதாவும் ____________ (2)

2.1.2 இல்லறம் அல்லது ____________ (2)

2.1.3 ____________ வேருடன் கெடும் (2)

2.1.4 ____________ மூவா மருந்து (2)

2.2 கொன்றை வேந்தன் விளக்கக் கதைகள்
கீழ்வரும் கதையை 8-10 வரிகளில் முடிவு செய்க:

ஓர் ஊரில் பச்சையப்பன் ஒருவன் இருந்தான் . . . (8)

2.3 திருக்குறள்

கொடுக்கப் பட்டுள்ள பகுதிகளைப் பயன்படுத்திக் கீழ்வரும் குறள்களை முடிவு செய்க:

2.3.1 அகர முதல எழுத்தெல்லாம் ____________ (2)

2.3.2 கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவின் ____________ (2)

2.3.3 வேண்டுதல் வேண்டாமையிலானடி ____________ (2)

2.3.4 ____________ ஆறாதே நாவினால் சுட்ட வடு (2)

[நாற்றாள் தொழாஅர் எனின், தீயினால் சுட்டபுண உள்ளாறும், சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல, ஆதிபகவன் முதற்றே உலகு]

2.4 திருக்கறள் என்ற நூலைப்பற்றி சுமார் 4-5 வரிகள் எழதுக (4)

**[28]**

IEB Copyright © 2018 

## QUESTION 3 பகுதி மூன்று

கவிதை: பாப்பாப் பாட்டு:

இப்பகுதியைப் படித்து, சரியான விடை தருக:

கொத்தித் திரியுமந்தக் கோழி - அதைக்
கூட்டி விளையாடு பாப்பா
எத்தித் திருடுமந்த காக்காய் - அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா
பாலைப் பொழிந்துதரும் பாப்பா - அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா
வாலைக் குழைத்துவரு நாய்தான் - அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா.
வண்டி இழுக்கும் நல்லகுதிரை - நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு - இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா

3.1 பாப்பாப் பாட்டை எழதியவர் யார்? (2)

3.2 இரண்டு பறவைகளின் பெயர்களை எழுதுக (2)

3.3 இரண்டு விலங்குகளின் பெயர்களை எழுதுக (2)

3.4 எது ம**னி**தனுக்குத் தோழன்? (2)

3.5 பாப்பாவிடம் எந்தெந்த தீமைகள் இருக்கக் கூடாது? (2)

3.6 பாப்பாவுக்கு வாழும் முறைமை என்ன? (2)
**[12]**

**40 marks**

**Total: 100 marks**

IEB Copyright © 2018